# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 11 புதன்கிழமை 26.08.2025 கதிர் 298









## ரணிலுக்கு உடனடியாக இருதய அறுவைச் சிகிச்சை

கொழும்பு, ஓக. 27

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உடனடியாக இருதய அறுவைச்சிகிச்சை செய்யப்பட வேண்டும் என்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின்பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷன் பெல்லன தெரிவித்துள்ளார்.

அறுவைச் சிகிச்சையை தேசிய வைத்தியசாலையில் செய்வதற்காகக் காத்திருப்பு பட்டியலில் இருக்க வேண்டும் என்றும், அவ்வாறு முடியாவிடின் தனியார் வைத்தியசாலைக்குச் சென்று அதைச் செய்யும் வாய்ப்பு ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இதயத்தில் சில சிக்கல்கள் உள்ளன. விரைவில் அறுவைச்சிகிச்சைக்கு உட்படுத்தினால் நல்லது.

அவருக்கு நீதிமன்றத்தால் 7 ➤

# ரணிலின் விடுதலைக்காகச் செயற்பட்ட அனைவருக்கும் சஜித் நன்றி தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 27

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சகல கட்சித் தலைவர்கள், சட்டத்தரணிகள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் இதற்காக இணைந்து பணியாற்றிய அனைவருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நன்றி தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று புதன்கிழமை நடைபெற்ற எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்ட போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு கூறினார். 7 ➤



## கம்மன்பிலவுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பம்

### நீதிமன்றில் சி.ஐ.டி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 27

முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் இன்று கொழும்பு கோட்டை நீதிவான் நிலுபுலி லங்காபுரவிடம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதியன்று ஊடக சந்திப்பொன்றில் முன்னாள் அமைச்சர் தெரிவித்த கருத்து தொடர்பான முறைப்பாட்டைத் தொடர்ந்தே இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தின் அதிகாரிகள் நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த ஊடக சந்திப்பில், உதய கம்மன்பில சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைச் 7 ➤

## தேசபந்துக்குப் பிணை



கொழும்பு, ஓக். 27


முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைப் பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் இன்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது. 7 ➤

## முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்தவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஓக. 27

முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்னவை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு பொல்கஹவெல நீதவான் 7 ➤





## விபத்தில் சிக்கிய பாடசாலை வான் இரு மாணவர்கள் உட்பட மூவர் சாவு

குருநாகல், ஓக. 27

குருநாகல், குளியாப்பிட்டியில் பல்லேவல பாலத்துக்கருகில் இன்று புதன்கிழமை காலை இடம்பெற்ற கோர விபத்தில் பாடசாலை மாணவர்கள் இருவர் மற்றும் வான் சாரதி உட்பட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

பாடசாலை வான் ஒன்று லொறியுடன் மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. 7 ➤

## யாழ். மாவட்ட அரச அதிபருடன் வடக்கு கடற்படைத் தளபதி சந்திப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27

வடக்கு மாகாணக் கடற்படைத் தளபதியாகப் புதிதாகப் பொறுப்பேற்ற ரியர் அட்மிரல் புடிக்ஹ லியனகமகே யாழ்ப்பாணம் மாவட்ட அரச. அதிபர் மருதலிங்கம் பிரதீபனை மரியாதை நிமித்தம் அரச அதிபர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். 7 ➤





## இலங்கைக்கு கடத்த முயன்ற பல கோடி பெறுமதியான சிகரெட் தொகை பறிமுதல்

கொழும்பு, ஓக .27

இலங்கைக்கு கடத்த முயன்ற, ஆறு கோடி இந்திய ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட் பைக்கட் மூட்டைகளை மரைன் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் அருகே வேம்பார் கடற்கரை வழியாக இலங்கைக்கு பல கோடி ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட் பைக்கட் மூட்டைகள் கடத்தப்படுவதாக மரைன் பொலிஸாருக்கு தகவல் கிடைத்திருந்தது.

இந்நிலையில், வேம்பார் சோதனை சாவடியில், மரைன் பொலிஸார் நேற்று அதிகாலை ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அதிவேகமாக சென்ற சிறிய லொறியொன்றை நிறுத்தி பொலிஸார் சோதனை செய்தனர். அதில், 32 மூட்டைகளில் வெளிநாட்டு சிகரெட் மூட்டைகள் இருந்துள்ளன.

அந்த வாகனத்தின் சாரதியான கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தியர்புரம் பகுதியை சேர்ந்த 52 வயதானவரை பொலிஸார் கைது செய்தனர்.

சிகரெட் பைக்கட் மூட்டைகள் படகு மூலம் இலங்கைக்கு கடந்த இருந்தது தெரிந்ததுள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட சிகரெட் பைக்கட் மூட்டைகளின் பெறுமதி சுமார் 6 கோடியே 40 லட்சம் இந்திய ரூபாய் என மரைன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(ஐ)

## பாதுகாப்பு அமைச்சின் வரவு செலவுத் திட்ட பூர்வாங்க கலந்துரையாடல்

கொழும்பு, ஓக .27

இலங்கை பாதுகாப்புப்படை உலகில் தலைசிறந்த தொழில்முறை பாதுகாப்புப் படைகளில் ஒன்றாக மாற வேண்டும் என்றும், அதற்கான தேவையான பயிற்சி மற்றும் வசதிகளுக்குத் தேவையான நிதியை முறையாக ஒதுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.



ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (26) நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் 2026 வரவு செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடலில் பங்கேற்றபோது ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

பாதுகாப்பு அமைச்சிற்கு 2025 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒவ்வொரு துறைகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் இலங்கை இராணுவம், விமானப்படை, கடற்படை, சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் கெடெட் அதிகாரிகளுக்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்தும் மீளாய்வு செய்யப்பட்டது.

பாதுகாப்புப் படை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வெளிநாட்டுப் பயிற்சி குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இந்த பயிற்சி ஏனைய அரச துறைகளிலுள்ள அதிகாரிகளுக்கு வழங்கப்படும் பயிற்சியை விட தனித்துவமானது என்பதால் அது குறித்து அதிக கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

போரின் போது உயிரிழந்த சிவில் பாதுகாப்புப் படையினரின் குடும்பத்தினருக்கும், ஏனைய பாதுகாப்புப் படையினரின் குடும்பத்தினருக்கும் இழப்பீடு வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக மருத்துவமனைக்கு அரசாங்கம் ஏற்கனவே பெருமளவு நிதியை செலவிட்டு வரும் நிலையில் , அதனால் வழங்கப்படும் சேவைகள் பொது மக்களுக்கு மிகவும் செயற்திறனுள்ளதாகவும் திறம்படவும் வழங்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

பாதுகாப்பு அமைச்சு தொடர்பான நிர்மாணப் பணிகள், பாதுகாப்புப் படையினரின் நலன்புரி நடவடிக்கைகள் உள்ளிட்ட பல பிரச்சினைகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எச்.எஸ். சம்பத் துய்யகொந்தா, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர்களான ரஸல் அபொன்சு மற்றும் கபில ஜனக பண்டார, முப்படைகளின் தளபதிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் நிதி அமைச்சின் சிரேஸ்ட அதிகாரிகள் குழுவும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (ஐ)



# ரணிலுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை நாளை அநுரவுக்கும் ஏற்படலாம்

கொழும்பு, ஓக .27

நாட்டில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள பிரச்சினை ரணில் விக்கிரமசிங்க என்ற தனிநபருடன் மாத்திரம் தொடர்புடையதல்ல. இன்று அவருக்கு ஏற்பட்டுள்ள நிலைமை நாளை தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் ஏற்படலாம். இது அரசியல் பழிவாங்கல் என்பதை உணர்ந்து கொண்டுள்ளதால் தான் மக்கள் நீதிமன்ற வளாகத்தில் குழுமியிருக்கின்றனர் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

நேற்று கொழும்பு- கோட்டை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு உண்மையல்ல என நீரூபிக்கப்பட்டால் அரசாங்கத்தின் நிலைமை என்ன? இன்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடம்பெற்றுள்ள இந்த நிலைமை நாளை தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் ஏற்படலாம். தற்போது எந்தவொரு தனிப்பட்ட விஜயமும் செய்வதில்லையா?

அவர் என்று ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுகின்றாரோ அதன் பின்னர் மேற்கொள்ளும் விஜயமே தனிப்பட்ட விஜயமாகக் கருதப்படும். எமக்கிடையிலான அரசியல் கருத்து வேறுபாடுகளும் முரண்பாடுகளும் அவ்வாறே உள்ளன. அவற்றில் எவ்வித மாற்றமும் இல்லை. ஆனால் இன்று நாம் கூடியிருப்பது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான போராட்டத்துக்காகும்.

குறிப்பாக இந்த பிரச்சினை ரணில் விக்கிரமசிங்க என்ற தனிநபருக்கானதல்ல. இதனை அனைவரும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பாரிய தவறிழைத்திருக்கின்றனர். அரசாங்கம் அரசியல் பழிவாங்கலில் ஈடுபடுவதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். எனவே தான் மக்கள் இன்று நீதிமன்ற வளாகத்தில் கூடியிருக்கின்றனர்.

சட்டம் நடைமுறைப்படுத்தப்பட முன்னர் அது தொடர்பில்



சமூக வலைத்தளத்தில் நபரொருவர் ஸ்திரமாகக் கருத்து வெளியிடுவாரெனில் நாட்டில் சட்டத்தின் ஆட்சி எந்த நிலைமையிலிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியும். இவ்வாறான நிலைமை தொடர்ந்தால் நாட்டில் அராஜக நிலைமை ஏற்படும் என்றார் (ஐ)

## யாரையும் பழிவாங்கவில்லை: இனியும் பழிவாங்கப் போவதில்லை



கொழும்பு, ஓக .27

ஆட்சியில் உள்ள தரப்பு எதிர்க்கட்சிக்கு சென்றவருடன் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகளுக்காக முன்னிலையாகுவது இலங்கையின் அரசியல் கலாசாரம். நாங்கள் யாரையும் பழிவாங்கவில்லை. இனியும் பழிவாங்க போவதில்லை என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

எதிர்கால அரசியல் திட்டமிடலுக்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்காக நாங்கள் ஒன்றிணையவில்லை. பெரும்பான்மை அதிகாரம் உள்ளதால் அரசாங்கம் தான்தோன்றித்தனமாக செயற்படுகிறது.

ஆட்சியில் உள்ள தரப்பு எதிர்க்கட்சிக்கு சென்றவருடன் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகளுக்காக முன்னிலையாகுவது இலங்கையின் அரசியல் கலாசாரம்.

இலங்கை அரசியல் வரலாற்றில் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தான் அரசியல் பழிவாங்கல்களாக பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

நாங்கள் யாரையும் பழிவாங்கவில்லை. இனியும் பழிவாங்க போவதில்லை. வெறுப்பை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்பட்டால் பிரச்சினைகள் மாத்திரமே மிகுதியாகும். மக்கள் விடுதலை முன்னணி கடந்த காலங்களிலும் வெறுப்பை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயற்பட்டது. இன்றும் வெறுப்புடன் செயற்படுகிறது.

ஜனநாயகத்தை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இன்று ஆட்சியில் இருப்பவர்கள் எதிர்காலத்தில் எதிர்கட்சிக்கு செல்லலாம். ஆனால் ஜனநாயகம் என்றும் உறுதியாக பேணப்பட வேண்டும் என்றார். (ஐ)

## 300,000 ரூபா லஞ்சம் வாங்கிய விவசாய அதிகாரிகள் கைது!

கொழும்பு, ஓக .27

விவசாயி ஒருவரிடம் 300,000 ரூபா லஞ்சம் வாங்கிய விவசாய அதிகாரிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விவசாய சேவைகள் மையத்தின் மேம்பாட்டு அதிகாரி மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி அதிகாரி ஆகியோரே இவ்வாறு லஞ்ச ஒழிப்பு ஆணையகத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜா-எலவைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில், ஒகஸ்ட் 15 ஆம் திகதி விவசாய சேவைகள் மைய அலுவலகத்தில் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதாக லஞ்ச ஒழிப்பு ஆணையகம் தெரிவித்துள்ளது.

நபர் ஒருவருக்குச் சொந்தமான ஒரு வயலை நெல் அல்லாத நிலமாகப் பெயரிடவும், அதிகாரபூர்வ பெயர் கிடைக்கும் வரை அந்த நிலம் நெல் அல்லாத நிலமாகக் கருதப்படும் என்பதை உறுதிப்படுத்தும் கடிதத்தை வழங்கவும் 300,000 ரூபா லஞ்சம் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக குறித்த நபர் லஞ்ச ஒழிப்பு ஆணையகத்திற்கு முறைப்பாடு பதிவு செய்ததையடுத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை மாரவில நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய போது செப்டெம்பர் 02 ஆம் திகதி வரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

## யானைகளின் பாதுகாப்புக்கு பிரிட்டன் இளவரசரின் ஆதரவைக் கோரும் சஜித்!

இலங்கையின் காட்டு யானைப்பாதுகாப்பு முயற்சிகளை ஆதரிக்குமாறு பிரிட்டனின் இளவரசர் வில்லியமிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆசிய யானைகளின் மிகப்பெரிய மக்கள்தொகையில் ஒன்றான இலங்கையின் நிலையை எடுத்துரைக்கும் வகையில், வேல்ஸ் இளவரசருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தை வழங்குவதற்காக கொழும்பில் பிரிட்டிஷ் உயர் ஆணையர் ஆண்ட்ரூ பேட்ரிக்கை பிரேமதாச சந்தித்தார். இந்தக் கடிதத்தில், ஆண்டுதோறும் 400க்கும் மேற்பட்ட யானைகளையும் 150 மனித உயிர்களையும் மோதல் பலியாகக் கொண்டிருப்பதாக பிரேமதாச தெரிவித்தார்.

அறிவியல் அடிப்படையிலான தேசிய பாதுகாப்பு உத்திக்கான அவசரத்தேவையை வலியுறுத்தினார். நீண்டகால கட்டமைப்பின் கீழ் நிபுணர்கள், சமூகங்கள் மற்றும் சர்வதேச கூட்டாளர்களை ஒன்றிணைத்து, தேசிய யானைப் பாதுகாப்பு மற்றும் சகவாழ்வு முயற்சியை உருவாக்க அவர் முன்மொழிந்தார். இலங்கையின் யானைகள் நமது தேசிய பாரம்பரியம் மட்டுமல்ல - அவை உலகளாவிய பல்லுயிர் பெருக்கத்தின் ஒரு புதையல். அவரது தலைமை மற்றும் பாதுகாப்பு வலையமைப்பின் மூலம், வனவிலங்குகள் மற்றும் நமது சமூகங்கள் இரண்டிற்கும் ஒரு நிலையான எதிர்காலத்தை நாம் உருவாக்க முடியும் என்று பிரேமதாச ஒரு அறிக்கையில் தெரிவித்தார். இலங்கையின் யானைகளை "உலகளாவிய புதையல்" என்று வர்ணித்து, பல்லுயிர் பாதுகாப்புக்கான இங்கிலாந்தின் ஆதரவைக் குறிப்பிட்டு, உயர் ஸ்தானிகர் பேட்ரிக் இந்த முயற்சியை வரவேற்றார்.

இந்த முயற்சி சரியான நேரத்தில் மற்றும் அவசியமானது, மேலும் பாதுகாப்பு மற்றும் சகவாழ்வுக்கான நீடித்த தீர்வுகளைக் கண்டறிவதற்கான உறுதிப்பாட்டை நான் பாராட்டுகிறேன் என்று அவர் கூறினார்.

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயத்தால் லண்டனில் உள்ள இளவரசர் வில்லியமின் அலுவலகத்திற்கு இந்தக் கடிதம் அனுப்பப்படும் என்று தெரிவித்தார். (ஐ)

## அரச அதிகாரிகள் நேர்மையாக செயற்படத் தவறினால் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்! - பிரதி அமைச்சர் எச்சரிக்கை



கொழும்பு, ஓக .27

அரச அதிகாரிகள் நேர்மையாக செயற்படத் தவறினால், அதன் விளைவுகளை எதிர்கொள்வதற்கு தயாராக இருக்க வேண்டும் என பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தமது தலைமையில் இடம்பெற்ற மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராகவும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதிகாரிகளுக்கு எதிராகவும் அது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், மாவட்ட ரீதியான குழுக்கள் அமைக்கப்பட்டு மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# வாக்கு திருட்டு குறித்து மோடி, அமித்ஷா வாய்திறக்காதது ஏன்? பீகார் யாத்திரையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி கேள்வி



மதுபனி: பீகாரில் வாக்காளர் உரிமை யாத்திரையை நடத்தி வருகிறார் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி. அவருடன் பீகார் எதிர்க்கட்சி தலைவர் தேஜஸ்வியாதவும் பயணம் மேற்கொண்டுள்ளார். நேற்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி, தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி உள்ளிட்டோர் இந்த யாத்திரையில் பங்கேற்றனர். இந்த யாத்திரையின் போது ராகுல்காந்தி கூறியதாவது:

அரசியலமைப்பைப் பாதுகாக்க மக்கள் தங்கள் வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாக்க வேண்டும். பீகார் வாக்காளர் பட்டியலில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு தீவிர திருத்தம் மூலம் பாஜ மற்றும் தேர்தல் ஆணையம் மக்கள் முன்பு அம்பலப்பட்டு நிற்கிறது. இதனால் பா.ஜ தலைவர்களை மக்கள் வாக்கு திருடர்கள் என்று அழைக்கத்தொடங்கி விட்டனர். பாஜ தலைவர்கள் தேர்தல் ஆணையம் மூலம் வாக்குத்திருட்டில் ஈடுபடுகிறார்கள்.

மக்கள் தங்கள் வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாக்கவும், இந்திய அரசியலமைப்பைப் பாதுகாக்கவும் முன்வர வேண்டும். வாக்களிக்கும் உரிமையை இழந்தால், அரசியலமைப்பைப் பாதுகாக்க முடியாது என்பதை மக்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஏழைகளுக்கு வாக்குகள் முக்கியம், ஏனென்றால் வாக்குகள் இல்லாமல், உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. மோடியும் ஆர்எஸ்எஸ் அமைப்பும் தேசியக் கொடியை ஒருபோதும் வணங்கவில்லை. (ஐ)

## தன்னை தற்காத்து கொள்ளவே பாஜவுடன் எடப்பாடி கூட்டணி: அமைச்சர் கே.என்.நேரு குற்றச்சாட்டு



தன்னை தற்காத்து கொள்வதற்காக தான் பாஜவுடன் எடப்பாடி கூட்டணி வைத்துள்ளார் என அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார். திருச்சி மேலப்புதூர் புனித பிலோமினாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் முதல்வரின் காலை உணவு திட்ட விரிவாக்க நிகழ்ச்சி நேற்று நடந்தது. இந்த திட்டத்தை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்தார். பின்னர் மாணவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார். அப்போது அவர் அளித்த பேட்டி:

எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமியின் துறையூர் சுற்றுப்பயணத்தின் போது, ஆம்புலன்ஸ் டிரைவர் தாக்கப்பட்டது நியாயமற்றது, கண்டிக்கத்தக்கது. அந்த கூட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் அழைத்ததன் பேரில் தான் அங்கு ஆம்புலன்ஸ் சென்றது. அரசு நிகழ்ச்சியாக இருந்தால் கூட முதல்வர் உரையாற்றினாலும் ஆம்புலன்ஸ் வந்தால் உடனடியாக கூட்டம் அப்புறப்படுத்தப்பட்டு வழிவிட்டு வருவது திமுக அரசு.

திமுக அரசு தான் வேண்டுமென்றே ஆம்புலன்சை கூட்டத்துக்குள் அனுப்புகிறது என எதிர்க்கட்சி தலைவர் விமர்சிப்பதில் உண்மை தன்மை இல்லை. அவர்கள் கூட்டம் நடத்தும் பகுதிகளில் எந்த இடர்பாடுகளும் எங்களால் அளிக்கப்படவில்லை. அனைத்தையும் மக்கள் கூர்ந்து நோக்கி கொண்டிருக்கின்றனர். வரும் தேர்தலில் சரியான தீர்ப்பையும் அளிப்பார்கள். பஞ்சப்பூரில் எனக்கு 300 ஏக்கர் இடம் உள்ளது என எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அவ்வாறு எனக்கும், என்னை சார்ந்தவர்களுக்கும் பஞ்சப்பூரில் இடம் இருந்தால் அதை மாவட்ட நிர்வாகமே எடுத்து கொள்ளலாம். எடப்பாடி பழனிசாமியும் எடுத்து கொள்ளட்டும். எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. எடப்பாடி பழனிசாமி தன்னை தற்காத்து கொள்வதற்காகவே பாஜவுடன் கூட்டணி வைத்துள்ளார். எதிர்வரும் மழைக்காலத்துக்கான முன்னேற்பாடு நடவடிக்கை முழுவீச்சில் நடந்து வருகிறது.


இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் சிறப்பு கவனம் செலுத்தி வருகின்றனர். எனது பதவியை காப்பாற்றி கொள்வதற்காக முதல்வர் குடும்பத்துடன் இணக்கமாக இருக்கிறேன் என எடப்பாடி பழனிசாமி கூறுவது எனக்கு நற்சான்றிதழ் அளிப்பது போலத்தான். தலைவர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி தான் நடந்து வருகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.(ஐ)

## தவெக தலைவர் விஜய் மற்றும் அவரது பவுன்சர்கள் 10 பேர் மீது வழக்குப் பதிவு!



மதுரை தவெக மாநாட்டில் சரத்குமார் என்பவரை பவுன்சர்கள் தூக்கி கீழே வீசிய புகாரில், விஜய் மற்றும் அவரது பவுன்சர்கள் 10 பேர் மீது பெரம்பலூர் குன்னம் போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். பவுன்சர்கள் தள்ளிவிட்டதில் இளைஞருக்கு காயம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. ஆபாசமாக திட்டுதல், தாக்குதல், தூக்கி வீசுதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## ஜம்மு காஷ்மீரின் கத்ராவில் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி இதுவரை 30 பேர் உயிரிழப்பு: தொடர்ந்து மீட்பு பணிகள் தீவிரம்



ஜம்மு காஷ்மீரின் கத்ராவில் உள்ள வைஷ்ணவ தேவி கோவில் அருகே கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி இதுவரை 30 பேர் உயிரிழந்துள்ளனர். தொடர்ந்து மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. காஷ்மீரில் வைஷ்ணவ தேவி கோவில் அருகே கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி இதுவரை 30 பேர் உயிரிழந்தனர். ஜம்மு - காஷ்மீரின் கதுவா மாவட்டத்தில் இரு வாரங்களுக்கு முன் ஏற்பட்ட மேக வெடிப்பு காரணமாக கனமழை பெய்து வருகிறது. கதுவா மாவட்டத்தில் இரு வாரங்களுக்கு முன் ஏற்பட்ட மேக வெடிப்பு காரணமாக பெய்த பெருமழையில் 10 பேர் உயிரிழந்தனர். ஒரு சில தினங்களில், கிஷ்த்வார் மாவட்டத்தில் ஏற்பட்ட மேக வெடிப்பு காரணமாக, 65 பேர் உயிரிழந்தனர்.

70க்கும் மேற்பட்டோர் மாயமாகினர். இந்த பேரழிவில் இருந்து மீள்வதற்குள், ஜம்மு - காஷ்மீரின் தோடா மாவட்டத்தில், மேக வெடிப்பு காரணமாக நேற்று பெருமழை கொட்டி தீர்த்தது. இந்த இயற்கை சீற்றத்தால் பிரசித்தி பெற்ற வைஷ்ணவி தேவி கோவில் அருகே மிகப் பெரிய அளவில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் ஆறு பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். இதனால், வைஷ்ணவி தேவி கோயில் யாத்திரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் கத்ராவில் உள்ள வைஷ்ணவ தேவி கோவில் அருகே கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி இதுவரை 30 பேர் உயிரிழந்தனர். தொடர்ந்து மீட்பு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இதற்கிடையே ஜம்மு, சம்பா, கத்துவா, ரியாஸி, உதம்பூர், ரஜோரி, ராம்பன், தோடா மற்றும் கிஷ்த்வார் மாவட்டங்களில் மேகவெடிப்பு, பெருவெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்படலாம் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. இதனால், பொதுமக்கள் அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர்.

# சமுதாய முன்னேற்றத்தில் பெண்களின் பங்களிப்பு



“மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா ” என்று பெண்ணின் பிறப்பையே பெரும் பேறாய் கருதிப்பாடினார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. சமுதாயம் முன்னேற ஆணவரைக் காட்டிலும் பெண்களின் பங்கு மகத்தானது. சமுதாயத்தில் பெண்களுக்கு என்றுமே சிறப்பிடமுண்டு. முற்காலத்தில் தமிழ்மக்கள் தம் வாழ்வில் மகளிருக்குத் தனியிடமளித்துள்ளனர் என்பதை சங்க நூல்களிலிருந்து அறிந்துகொள்ள முடிந்தது. ஔவையார், காக்கை பாடினியார் போன்ற பெண்பாற் புலவர்கள் பெருமை (பீடு) பெற வாழ்ந்த வரலாறுமுண்டு.

இறைவன் படைப்பில் ஆண், பெண் இருபாலாரும் சமமே. ஆண்கள் உயர்ந்தவர்கள் என்றும் பெண்கள் தாழ்ந்தவர்கள் என்றும் பேசுதல் பேதைமையாகும். குறிப்பாகப் பெண்கள் அன்பிலும் பண்பிலும் உயர்ந்தவர்கள். அன்னை தெரேசா உலகிலுள்ள அநாதைக் குழந்தைகளுக்கும் ஆதரவற்ற அனைத்து உள்ளங்களுக்கும் கருணையுள்ள தாயாகத் திகழ்ந்தார்.

கற்பின் உணர்வே பெண்மை என்பதை ஐம்பெரும் காப்பியங்களில் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் உயர்வை எடுத்துக் கூறியுள்ளார்கள்.

உயிரின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், வாழ்விற்கும் பெண்ணே முதன்மையானவள்.

19 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழ்நாட்டில் ஆங்கிலேயருக்கு எதிராக வீறு கொண்டு எழுந்த பெண்கள் பலர் உண்டு. அதில் வேலுநாச்சியார் முக்கியமானவர். இவர் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய வீரமங்கை.

தமிழீழத்திலுள்ள வளங்கொழிக்கும் மட்டு நகரில் இந்தியா இராணுவப்படையை எதிர்த்து சாகும் வரை உண்ணா விரதத்தை “அன்னை பூபதி” அம்மாள் மேற்கொண்டார். இவர் காந்தியவழியில் தியாகத்தையும் வீரத்தையும் உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளார். இதனாற்றான் பெண்ணைத் தியாகத்தின் சின்னமாகவும் கடமையின் காப்பாகவும் பொறுமையின் இருப்பிடமாகவும் போற்றினார்.

அத்தகு சிறப்பு மிகு பெண்களை இழிவுப்படுத்தும் வேதவிதிகளும் சமூக மதக்கொடுமைகளும் இடைக்காலத்தே புகுந்தன. இதன் பேறாகப் போற்றிப் பேணப்பட்ட பெண்குலம் தாழ்வுற்றது. “அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்கு” எனக் கேட்டனர். பெண்ணடிமைத் தளைகளைத் தகர்தெறிந்து ஆணுக்கிங்கே பெண்சமனென அறைகூவல் விடுத்தார் பாரதியார் “பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்து வந்தோம் எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் அளைப்பில்லைக் காண் ” என்று அவர் முழங்கிய பின்னர் தான் பெண்ணுரிமை பரவத்தொடங்கியது. மகளிர் வாழ்வில் புதிய ஒளிமலர்ந்தது பெண்கள் விழித்தெழுந்தனர்.



பெண்கள் சமூகம், அரசியல், பொருளாதாரம், அறிவியல் துறை, மருத்துவத்துறை, சட்டத்ததுறை, காவற்துறை, இலக்கியத்துறை போன்ற துறைகளில் பங்கு கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது.

இன்று பெண்கள் சகலதுறைகளிலும் ஆண்களோடு சரிநிகர் சமனாகப் பங்கு கொண்டு வருகின்றனர். சமுதாயத்தின் பல்வேறு ஆக்கப் பணிகளிலும் அவர்கள் ஈடுபடவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இதன் அடிப்படையில் “பெண்விடுதலையே ஒரு இனத்தின் விடுதலைக்கான முதல் படி” என்று கூறியவர் எம் தமிழீழத் தேசியத் தலைவர மேதகு வே. பிரபாகரன் அவர்கள் தமிழீழ தேசிய விடுதலைப்போராட்டத்தில் தமிழீழ அரசின் அனைத்து துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக பெண்களையும் ஆளுமை உள்ளவர்களாக உருவாக்கி பெண்ணடிமைத்தனத்தை உடைத்தெறிந்ததை உலகம்பார்த்து வியந்தது யாவரும் அறிந்ததே. 10.10.1987 அன்று இந்தியப்படைகளுடன் நடந்த தாக்குதலில் வீரச்சாவடைந்த 2ஆம் லெப் மாலதி தமிழீழ விடுதலைப்புலிகளின் முதல் பெண் மாவீரர் ஆவர். அந்நாளையே தமிழீழ தேசியத் தலைவர் அவர்களால் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளாக பிரகடனப்படுத்தப்பட்டது. அதன்பின், மகளிர்களுக்கான படைஅணிகணில் ஒன்றிற்கு மாலதிபடையணி என பெயர்சூட்டப்பட்டது. அப்படையணியானது தமிழ் மக்களைக் காக்கும் நோக்கோடு சிங்கள படைகளை எதிர்கொண்டு தனது வீரத்தை உலகிற்குக்காட்டி நின்றது.

அதனைத்தொடர்ந்து முதல் பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி “தமிழீழப் பெண்களின் வீரத்திற்கு இலக்கணமாய் எனது சாவு அமையும் எனக்காக யாரும் கலங்கக்கூடாது ” என்று கூறிய வண்ணம் தனது கையை அசைத்துக்கொண்டு அந்தக் கடற்கரைக் காற்றில் கலந்து கொண்டு தன் வீரத்தை எடுத்துக்காட்டி தியாகியானாள்.

“சாதிக்கத்துணிந்துவிட்டால் சாதாரண மனிதனும் சாதிக்க முடியும்” எனும் எமது தேசியத்தலைவரின் எண்ணத்திற்கு ஏற்ப வீரமங்கைகள் அனைவரும் வித்திட்டார்கள்.

முதல் பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி

தழிழ்மறை தந்த திருவள்ளுவர் வாழ்க்கைத்துணை நலம் பற்றிக் கூறும் போது இல்லறவாழ்வில் ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணும் துணைவர் எனக் கொண்டு ஒற்றுமையோடு செயற்பட்டால் வாழ்க்கை சிறப்புறும் பண்பட்ட சமுதாயம் உருவாகும் என்கிறார்.

தொட்டிலை ஆட்டும் கையே உலகை ஆளும் கை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

உலகிலே பெண்களே இன்று முன்னிலையில் திகழ்கின்றார்கள். சனாதிபதி முதல் உயர்நீதிமன்றம் வரை பல்கலைகழகங்கள் தொட்டுப் பாடசாலைகள் வரை பாராளுமன்றம் தொட்டு உள்ளூராட்சிச்சபைகள் வரை பெண்கள் உயர்ந்த பதவியில் இருப்பதைக் காணமுடிகிறது. இத்தகு சிறப்புக்கள் பெண்கள் பெற்றிருந்த போதிலும் அவர்களது உரிமைகளுக்கு வேட்டுவைக்கும் சில நிகழ்வுகள் இன்னும் காணப்படுகின்றன.

வரதட்சணை என்ற பெயரால் சீதனக் கொடுமையால் கன்னியர் பலர் கண்ணீருடன் காலங்கழித்திடும் அவல நிலையும் காணப்படுகிறது. பெண்களை வெறும் போகப் பொருளாகவும் பெண் களை விளம்பரப பொருளாகவும் வியாபாரப் பொருளாகவும் சிலர் நடத்துகின்றனர். இந்த நிலை மாறவேண்டுமாயின் சமூகம் விழிப்புற வேண்டும்.

சமூகப்பணிகளில் பெண்கள் துணிச்சலுடன் ஈடுபடுவதன் மூலமே இக் கொடுமைகளை ஒழித்திட முடியும். சமுதாய முன்னேற்றத்திற்கான பணிகளில் பெண்கள் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டியது அவசியமாகும். எனவே நமது நாடு வளம் பெறவும் நங்கையர் வாழ்வு சிறப்புறவும் சமுதாய முன்னேற்றத்தில் பெண்கள் துணிச்சலுடன் பெரும் பங்கேற்க்க தமிழீழ பெண்கள் எழுச்சி நாளில் உறுதி கொள்வோம்.

# ரஷ்யா– உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் பிரதமர் மோடிக்கு அதிபர் ஜெலன்ஸ்கி வேண்டுகோள்



உக்ரைன் ரஷ்யா போர் மூன்றாண்டுகளை கடந்து நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்து விட்டனர். இந்த போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க அதிபர் டிரம்ப் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறார். இதனிடையே உக்ரைன் கடந்த 24ம் தேதி(ஞாயிற்றுக்கிழமை) தனது 34வது சுதந்திர தினத்தை கொண்டாடியது. இதையொட்டி உக்ரைன் மக்களுக்கு பிரதமர் மோடி சுதந்திர தின வாழ்த்துகளை தெரிவித்திருந்தார். மோடியின் வாழ்த்துகளுக்கு உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஜெலன்ஸ்கி தன் எக்ஸ் தள பதிவில், “உக்ரைன் சுதந்திர தினத்துக்கு வாழ்த்து தெரிவித்த இந்திய பிரதமர் மோடிக்கு நன்றி. அமைதியை உருவாக்க முயற்சிக்கும் இந்தியாவின் பங்களிப்பை நாங்கள் பாராட்டுகிறோம். இப்போது முழு உலகமும் இந்த கொடூரமான போரை கண்ணியத்துடனும், நீடித்த அமைதியுடனும் முடிவுக்கு கொண்டு வர பாடுபடுகையில் இதில் இந்தியாவின் பங்களிப்பை உக்ரைன் பெரிதும் நம்புகிறது. ராஜதந்திரத்தை வலுப்படுத்தும் ஒவ்வொரு முடிவும் ஐரோப்பாவில் மட்டுமல்ல, இந்திய-பசிபிக் பிராந்தியம் மற்றும் அதற்கு அப்பாலும் சிறந்த பாதுகாப்புக்கு வழிவகுக்கிறது” என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## 103 விமானங்ககளை வாங்குகிறது தென் கொரியா




தென் கொரியாவைச் சேர்ந்த 'கொரியன் ஏர்' விமான நிறுவனம், 103 விமானங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தத்தை, 'போயிங்' நிறுவனத்துடன் செய்துள்ளது.

கிழக்கு ஆசிய நாடான தென் கொரியாவின் கொரியன் ஏர் நிறுவனம், தன் விமானங்களை நவீனமயமாக்கவும், வளர்ச்சியை மேம்படுத்தவும், அமெரிக்காவைச் சேர்ந்த போயிங் விமான நிறுவனத்துடன் 4.35 லட்சம் கோடி ரூபாய் மதிப்பில், 103 விமானங்கள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்குவதற்காக ஒப்பந்தம் செய்துள்ளது.

கொரியன் ஏர் நிறுவனத்தின் வரலாற்றில், ஒரே நேரத்தில் வாங்கப்படும் மிகப்பெரிய ஆர்டர் இதுவாகும். (ஐ)

## வியட்நாமை புரட்டி போட்ட கஜிகி சூறாவளி: 3 பேர் உயிரிழப்பு



*வியட்நாமில் வீசிய கஜிகி சூறாவளியில் சிக்கி 3 பேர் பலியாகினர். 13 பேர் காயமடைந்தனர். தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கடந்த இருதினங்களாக கனமழை பெய்து வருகிறது. இந்நிலையில் வியட்நாம் நாட்டில் கஜிகி என பெயரிடப்பட்ட வெப்ப மண்டல புயல் தாக்கியது. மணிக்கு 117 கிமீ வேகத்தில் காற்று வீசியதால் பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தன. தலைநகர் ஹனோய் உள்பட பல முக்கிய நகரங்கள் வெள்ளக்காடாகின.*

*கனமழை காரணமாக வீடி இடிந்து விழுந்ததில் 90 வயது முதியவர் மற்றும் மழையால் மின்சாரம் தாக்கியதில் ஒருவர் உள்பட 3 பேர் மழை தொடர்பான சம்பவங்களில் உயிரிழந்தனர். 13 பேர் காயமடைந்துள்ளனர். நேற்று முன்தினம் பிற்பகல் கஜிகி சூறாவளி கரையை கடப்பதற்கு முன்பாகவே, ஹோவா, குவாங் ட்ரை, ஹியூ மற்றும் டானாங் ஆகிய மாகாணங்களில் அபாயகரமான 1,52,000 வீடுகளில் தங்கியிருந்த சுமார் 6 லட்சம் மக்களை வெளியேறுமாறு வியட்நாம் அரசு உத்தரவிட்டிருந்தது.*

*ஹோவா, குவாங் ட்ரை மாகாணங்களில் விமான சேவைகள் நிறுத்தப்பட்டு, விமான நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. கஜிகி சூறாவளி, கனமழையால் 7,000 வீடுகள், 28,000 ஹெக்டேர் விளைநிலங்கள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பல மாகாணங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருளில் மூழ்கி உள்ளன. இதைத்தொடர்ந்து சூறாவளி பாதித்த பகுதிகளில் 16,500 ராணுவ வீரர்கள், 1,07,000 துணை ராணுவ படையினர் குவிக்கப்பட்டு, மீட்பு மற்றும் நிவாரண பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)*

## ஹெச் 1 பி விசா, க்ரீன்கார்டு முறையை மாற்றுவோம் அமெரிக்க வர்த்தக அமைச்சர் அறிவிப்பு



வாஷிங்டன் ஹெச் 1 பி விசா, க்ரீன்கார்டு முறையை மாற்றுவோம் என்று அமெரிக்க வர்த்தகத் துறை அமைச்சர் ஹோவார்டு லுட்னிக் கூறி உள்ளார்.

அமெரிக்காவின் பிரபல தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் கூறி உள்ளதாவது

தற்போது நடைமுறையில் இருக்கும் ஹெச் 1 பி விசா என்பது ஒரு மோசடி. இந்த விசா மூலம் வெளிநாடுகளில் இருந்து வரும் பணியாளர்கள் அமெரிக்காவில் வேவைவாய்ப்பு பெறுகின்றனர்.

இங்குள்ளோரை (அமெரிக்கர்கள்) பணியமர்த்த வேண்டும்என்பது அமெரிக்க நிறுவனங்களின் முன்னுரிமையாக இருக்க வேண்டும். தற்போதுள்ள இந்த ஹெச் 1 பி விசா நடைமுறையை மாற்ற போகிறோம். அது மோசமானது என்பதே அதற்கு காரணம்.

அதனால் தான் அதை டிரம்ப் மாற்ற போகிறார். அவர் தலைமையின் கீழ் அமெரிக்க குடியேற்றக் கொள்கை மறுவடிவமைப்பு செய்யப்படும். மேலும், க்ரீன் கார்டு முறையையும் மாற்ற போகிறோம். நாங்கள் சிறந்த நபர்களை வேலைக்கு தேர்ந்தெடுக்கும் நடவடிக்கைகளை தொடங்க உள்ளோம்.

இதற்காக தங்க அட்டை திட்டம் ஒன்றை டிரம்ப் நிர்வாகம் தொடங்க உத்தேசித்துள்ளது. இந்த திட்டத்தின் மூலம் குறைந்தது 5 மில்லியன் அமெரிக்கா டாலர்களை முதலீடு செய்யும் வெளிநாட்டினருக்கு நிரந்தர வசிப்பிடம் வழங்க இந்த திட்டம் வழிவகை செய்யும். இந்த திட்டம் விரைவில் வரும். மாற வேண்டிய நேரம் இது. இவ்வாறு ஹோவார்டு லுட்னிக் கூறினார். (ஐ)



## கடந்தாண்டு அரசியலுக்கு வந்தவர் புதிய பிரதமராக தேர்வானார்

லிதுவேனியாவின் புதிய பிரதமராக அந்நாட்டின் தொழிற்சங்க கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் இங்கா ருகினீனே, 44, தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஐரோப்பிய நாடான லிதுவேனியாவில் பிரதமராக இருந்த கிண்டவுடாஸ் பலுகாஸ், தொழில்களில் மோசடி செய்ததாக புகார் எழுந்தது. இதையடுத்து சமீபத்தில் அவர் தன் பதவியை ராஜினாமா செய்தார்.

இதைத் தொடர்ந்து, புதிய பிரதமராக அந்நாட்டின் தொழிற்சங்க கூட்டமைப்பின் முன்னாள் தலைவரான இங்கா ருகினீனே தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு நடந்த பொதுத் தேர்தலுக்கு முன்புதான், சமூக ஜ னநாயக கட்சியில் அவர் சேர்ந்தார். தேர்தலில் போட்டியிட்டு பார்லிமென்ட் உறுப்பினரான இவர், கடந்தாண்டு டிசம்பர் முதல் அந்நாட்டின் சமூக பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக பணியாற்றிவந்தார். இந்நிலையில் தற்போது அந்நாட்டின் புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். (ஐ)

## தேசந்துவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி கொழும்பு - காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டிருந்தார்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு உத்தரவிடக் கோரி தேசபந்து தென்னக்கோன் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன் பிணை மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

ஆனால் தேசபந்து தென்னக்கோனின் முன்பிணை மனு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

இதனையடுத்து முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மிரிஹான பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து கடந்த 20 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேசந்துவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிமன்றம் இன்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்ன இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடற்படைத் தளபதியாக நிஷாந்த உலுகேதென்ன கடமையாற்றிய காலத்தில் குருநாகல் - பொத்துஹெர பிரதேசத்தில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படையில், நிஷாந்த உலுகேதென்ன கடந்த ஜுலை மாதம் 28 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவின் கீழ் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது, 13 மாணவர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்.மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் மேலதிக அரச அதிபர் க.சிவகரன், மேலதிக அரச அதிபர் (காணி) பா.ஜெயகரன், பிரதம கணக்காளர் எஸ் கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் மற்றும் உதவி மாவட்ட செயலாளர் செல்வி உ.தர்சினி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## ரணிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிணை வழங்கப்பட்டுள்ளமையால் அறுவைச் சிகிச்சைக்காக அவர் விரும்பும் வைத்தியசாலைக்குச் செல்லலாம். தேசிய வைத்தியசாலையில் காத்திருப்புப் பட்டியல் சில நேரங்களில் சுமார் 3 ஆண்டுகள் ஆகும்.

எனவே, அவர் தனது சொந்தச் செலவில், விரும்பும் வைத்தியசாலையில் அதை விரைவாகச் செய்ய முடியும்.

தற்போது, அவருக்குக் கரோனரி தமனிகளில் அடைப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவருக்கு நீரிழப்பும் உள்ளது.

அந்த நிலை படிப்படியாகச் சரி செய்யப்பட்டு வருகின்றது. அந்த நேரத்தில், அவரது இருதயம் பலவீனமாக இருப்பதைக் கண்டறிய முடிந்தது. அதை இயல்பு நிலைக்குக் கொண்டுவர அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும்." - என்றார்.

## கம்மன்பிலவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிதைக்கக்கூடிய கருத்துக்களைத் தெரிவித்தார் என முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் மன்றுரைத்தனர்.

இந்தநிலையில் அந்தக் கருத்துக்கள் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையின் கீழ், குற்றமாகுமா என்பதைத் தீர்மானிக்க விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் மேலும் தெரிவித்துள்ளனர்.

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைதுக்குப் பின்னர் எழுந்த ஜனநாயகத்துக்கு ஏற்பட்ட சவாலை வெற்றி கொள்வதற்கு அனைத்துக்கட்சிகளுடனும் கூட்டிணைந்த, தொடர்ச்சியான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

போராட்டத்தில் இணைந்து கொண்டவர்களை மிரட்டுவதற்கு அரசு பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாண்டது. இதுபோன்ற அச்சுறுத்தல்களை எதிர்கொள்பவர்களுக்கு உடனடி சட்ட உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்குச் சட்டத்தரணிகள் குழாமொன்றை நிறுவ வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இதன்போது யோசனை முன்வைத்தார்.

இதன் பிரகாரம், இந்தக் குழாமை ஒருங்கிணைக்கும் பணிகளை முன்னெடுப்பதற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி பெயரிடப்பட்டார். அதேபோல், இந்த அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் உட்பட பரந்தபட்ட ஒன்றிணைவைக் கட்டியெழுப்பத் தேவையான ஒருங்கிணைப்புப் பணிகளை முன்னெடுப்பதற்கு முன்னாள் அமைச்சர் லசந்த அழகியவண்ண மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய ஆகியோர் பெயரிடப்பட்டனர்.

# மன்னாரில் தொடரும் போராட்டம்!

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று 25 ஆவது நாளாக கனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள குறித்த போராட்டத்துக்கு, நானாட்டான் பிரதேச மக்கள் கலந்து கொண்டு தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐந்து வாகனங்கள் மோதி விபத்து!

தம்புள்ளை, ஓக. 27

கொழும்பு - திருகோணமலை பிரதான வீதியில் தம்புள்ளை, போஹோரன் வெவ பகுதியில் ஐந்து வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இன்று இடம்பெற்ற இந்த விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கொழும்பில் இருந்து தம்புள்ளை நோக்கிச் சென்ற மூன்று வாகனங்கள் எதிர்த் திசையில் சென்ற லொறி மற்றும் கார் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தம்புள்ளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். செம்மணி இரண்டாவது பெரிய புதைகுழியாக மாற்றம்!

யாழ். செம்மணி மனித புதைகுழியில் இருந்து நேற்றையதினம் மேலும் 16 பேரின் எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா தெரிவித்தார்.

அதன்படி செம்மணியில் இதுவரை அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் நாட்டின் இரண்டாவது பெரிய புதைகுழியாக மாறியுள்ளது.

செம்மணியில் இரண்டாம் கட்ட மூன்றாம் பகுதி அகழ்வாய்வுகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் 34வது நாளான நேற்றைய தினம் (26) செம்மணி மனித புதைகுழியில் மேலும் 16 பேரின் எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

செம்மணி புதைகுழியிலிருந்து ஒரே நாளில் அதிக எண்ணிக்கையிலான உடல்கள் நேற்றைய அகழ்வின் போதே அடையாளம் காணப்பட்டுள்ளது.

தடயவியல் பரிசோதனைக்குப் பின்னரே இது தொடர்பில் உறுதிப்படுத்தப்படும் என சட்டத்தரணி ரணிதா தெரிவித்தார்.

செம்மணியில் அகழ்வில் இதுவரையில் 166 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது..

# கச்சத்தீவை இந்தியாவுக்கு நாம் ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டோம்- அமைச்சர் விஜித ஹேரத்!

கச்சத்தீவை இந்தியாவுக்கு நாம் ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டோம் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

'கச்சத்தீவை மீட்டு தமிழக மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு பிரதமர் மோடி தீர்வை வழங்க வேண்டும்' என நடிகரும் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய் தெரிவித்திருந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர்,

தற்போது தென்னிந்தியாவில் தேர்தல்காலம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை கூறிவருகின்றனர். அதனை நாம் பொருட்படுத்த தேவையில்லை.

இராஜதந்திர மட்டத்தில் எவரும் கருத்து வெளியிட்டிருந்தால் அதுகுறித்து கவனம் செலுத்தலாம். ஆனால் இவ்வாறான கருத்துகளை நாம் பொருட்படுத்த தேவையில்லை.

கச்சத்தீவை இந்தியாவுக்கு நாம் ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டோம் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து தப்பியோடிய சந்தேகநபர்- பொலிஸ் சார்ஜெண்ட் பணி இடை நீக்கம்!

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சந்தேகநபர் ஒருவர் தப்பியோடியுள்ள சம்பவத்தை அடுத்து, பொலிஸ் சார்ஜெண்ட் ஒருவர் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற திருட்டு சம்பவம் தொடர்பில் கடந்த 25ஆம் திகதி சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

குறித்த சந்தேக நபர் சுகவீனமடைந்த நிலையில், பொலிஸ்பாதுகாப்புடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், வைத்தியசாலையில் இருந்து தப்பியோடியுள்ளார்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் மல்லாகம் நீதவான் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

நீதிமன்றினால் சந்தேக நபருக்கு எதிராக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸாரின் உள்ளக விசாரணைகளை அடுத்து சந்தேகநபர் தப்பி சென்ற நிலையில், அன்றைய தினம் சந்தேக நபரின் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் சார்ஜெண்ட் தர உத்தியோகஸ்தர் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# வீதி தடை தொடர்பாக யாழ். மாநகர சபை விடுத்துள்ள அறிவித்தல்!

வீதி தடை தொடர்பாக யாழ். மாநகர சபையால் அறிவிப்பு ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

2025.08.28ஆம் திகதி முதல் 2025.11.19ஆம் திகதி வரை யாழ். மாநகர சபையினால் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் வீதித் தடை ஏற்படுத்தப்படவுள்ளது.

அதன்படி,

இடுகாடு வீதி புனரமைப்பு (யாழ் பிரதம தபாலக சந்தியிலிருந்து தொலைத் தொடர்பு நிலைய சந்தி வரை)

மூத்த விநாயகர் வீதி திருத்தமும், முடிவுப் பகுதியில் உள்ள பாலம் திருத்தம் (மூத்த விநாயகர் கோவில் வீதி, ஆசிர்வாதப்பர் வீதி இணையும் சந்தி)

முருகமூர்த்தி பெரிய தம்பிரான் இணைப்பு பாலம் கட்டுமாணம் (முருகமூர்த்தி வீதி பெரியதம்பிரான் வீதி சந்தி)

ஆகிய வீதிகளில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், அவ் வீதிகளை பயன்படுத்துவோர் போக்குவரத்தினை சிரமம் இன்றி மேற்கொள்ள மாற்று பாதையினை பயன்படுத்துமாறு யாழ் மாநகரசபை கேட்டுக்கொண்டுள்ளது.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்ஹிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!
www.jride.lk